திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் எந்த விதியின் கீழ் ஒழுங்குப் பிரச்னையைக் கொண்டு வருகிறீர்கள்? நீங்கள் உட்காருங்கள்.

திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன்: ஒழுங்குப் பிரச்னை என்று. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் ஒழுங்குப் பிரச்னை எழாது. எழுத்து மூலம் அதற்கான விதியின்கீழ் கொடுக்க வேண்டும்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) 1978 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவரவர்களே, 1978 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். 92 (1) விதியின் கீழ். . . . . I oppose the introduction of the Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: You are opposing, that is all. நீங்கள் பேச முடியாது.

திரு. க. சுப்பு: பேசலாம், விதியைப் படிக்கிறேன். நானே வாசித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதியை நான் பார்த்து விடுகிறேன், உங்கள் வாசகத்தை நம்பி ரொம்ப நாள் ஆகிறது.

---

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1978 செப்டம்பர் 1]

திரு. க. சுப்பு : I shall read rule 92 (1). 'If a motion for leave to introduce a Bill is opposed, the Speaker, after permitting, if he thinks fit, a brief statement from the member who moves and from a member who opposes the motion, may without further debate, put the question thereon.
அமைச்சர் ஷார்ட்டாகச் சொல்லட்டும்.

(முற்பகல் 10-30)

அதற்கடுத்தாற்போல் நான் சொல்ல வேண்டும். டிபேட் வேண்டியதில்லை. No debate but statement can be made.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்கிறேன், அதிலேயே போட்டிருக்கிறது. இருந்தாலும் திரு. சுப்பு, தங்களுடைய சாமார்த்தியத்தைக் காட்டி, 2 நிமிடத்திலே முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : நான் சொல்வதற்கு முன்பு அமைச்சர் ஸ்டேட்மெண்ட் கொடுக்க வேண்டும். அவர் கொடுக்கட்டும், பிறகு நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவரை ஸ்டேட்மெண்ட் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்துகிற உரிமை எனக்குக் கிடையாது. தயவு செய்து திரு. சுப்பு, புதிய ஒரு மரபை அமைச்சர் சொல்வதாக இருந்தால் சொல்லட்டும், நான் வற்புறுத்த முடியாது.

திரு. க. சுப்பு : பில்லைக் கொண்டு வரும்போது, அமைச்சர் தயாராக வராமல் இருக்கமாட்டார். அவர் ப்ரீஃபாகச் சொல்லி விட்டால், நான் உடனே, என்னுடைய கருத்தைச் சொல்லி விடுகிறேன்.

THE HON'BLE THIRU S. RAMACHANDRAN : It is left to the Hon'ble Minister to make a statement or not. If the Member has any relevant point he may put forth.

[1978 செப்டம்பர் 1

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் ஒரு ப்ரீஃப் ஸ்டேட்மென்ட் விடவேண்டுமென்று நான் கட்டாயப்படுத்த முடியாது. ப்ரீஃப ஸ்டேட்மென்ட் விடுவதும், விடாததும் அவரைப் பொறுத்தது.

திரு. க. சுப்பு : கட்டாயப்படுத்த முடியாது, நீங்கள் கேட்கலாம் அல்லவா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் இதுவரையிலும் நடப்பவைகளைக் கேட்டுக் கொண்டு தானே இருக்கிறார்.

திரு. க. சுப்பு : அவர் பேச வேண்டிய நேரத்தையும் எனக்குக் கொடுத்தால் ரொம்ப நல்லது.

பேரவைத் தலைவரவர்களே, இந்த பில்லை நான் அப்போஸ் செய்யக் காரணம், சென்னை மாநகராட்சி நிர்வாகம் பற்றி ஆராய, திரு. சட்டநாதன் தலைமையில் ஒரு குழு போடப்பட்டது. அந்த சட்டநாதன் குழு கொடுத்த அறிக்கையை அடிப்படையாக வைத்து, சில முடிவுகள் எடுக்கப்பட்டதாகவும், அந்த முடிவுகளுக்குச் சட்ட வடிவம் கொடுக்க—அப்பொழுது சட்ட மன்றம் இல்லையென்பதால்—அவசரச் சட்டம் போடப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அவசரச் சட்டத்தை மாற்ற இப்பொழுது இந்த 'பில்' கொண்டு வரப்பட்டிருக்கிறது. இப்பொழுது சென்னை மாநகராட்சிக்குத் தேர்தல் வரவில்லை. அதோடு, சட்டநாதன் குழு அறிக்கை அடிப்படையில் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. அந்தக் கமிட்டியின் அறிக்கை எங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. நான் நூலகத்திலே சென்று பார்த்தேன், நூலகத்திற்கும் கொடுக்கப்படவில்லை. இது எந்த அடிப்படையிலே கொண்டு வரப்படுகிறது என்று அமைச்சருக்கே தெரியாது, நான் எப்படிச் சொல்ல முடியும் ? அந்த அறிக்கையிலே என்ன அடிப்படையிலே சொல்லப்பட்டிருக்கிறது, எந்த அடிப்படையிலே இந்த மசோதா கொண்டு வரப்படுகிறது என்பதையெல்லாம் தெரிந்து கொள்ளாத நிலையில் நாமெல்லாம் இருட்டறையிலே இருப்பது போல் இருக்கிறது. அவசரச் சட்டம் வருவதற்கு முன்னாலேயே இந்த சட்டநாதன் கமிட்டி அறிக்கை வந்திருக்கிறது. வந்தவுடனே நூலகத்திலே வைத்திருக்கிறார்களா ? It is taken for granted.

1978 செப்டம்பர் 1] [திரு. க. சுப்பு]

பிரச்னைகளை அணுகுகிற மாதிரி, எப்படியாவது அவசரச் சட்டம் கொண்டு வருவது; தெரிந்தோ, தெரியாமலோ கொண்டு வருவது; பிறகு அதனை மாற்ற இங்கே மசோதா கொண்டு வருவது; எப்படியாவது அது நிறைவேறும் என்ற நிலை இருக்குமானால், அது அவசரச் சட்டத்தைப் போடுவதற்குக் கொடுத்துள்ள அதிகாரத்தை, இந்தச் சட்ட மன்றத்திற்குள்ள அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதாகும். ஆகவே, இந்த 'பில்'லை அறிமுகம் செய்வதை நான் எதிர்க்கிறேன்.

அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(ஆ) 1978 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.